Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 642/2025 PW-1**

Name : ரவிக்குமார்
Father / Husband name : வெங்கடசுப்பன்
Village : பெரப்பேரி
Age : 55
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 11.02.2026

A1 to A4 present. A5 absent. Petition u/s 317 CrPC filed and allowed. Defence counel present. HC 1967 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது விவசாய வேலை செய்கிறேன். சாட்சி அம்சாவதி எனது அம்மா. சாட்சி சசிரேகா எனது தம்பியின் மனைவி. சாட்சி தசரதன் எனது பெரியப்பா மகன். சாட்சி ஆறுமுகம் எனது நண்பர். வழக்கின் எதிரிகளில் தாஸ், விக்கி ஆகியோர்களை தெரியும், மற்ற எதிரிகளை தெரியாது. கடந்த 2020 ம் வருடம் எனது நிலத்தை சென்னையிலுள்ள நரசிம்மன் என்பவருக்கு விற்ற நிலம் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு நரசிம்மன் என்பவர் தாஸ் என்பவரின் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். கடந்த 11.08.2020 அன்று மாலை 04.30 மணியளவில் நான் நிலத்திலிருந்து வீட்டிற்கு வந்தபோது எனது வீட்டின் அருகே வந்தபோது எதிரிகள் எனது அம்மா மற்றும் தம்பியின் மனைவியிடம் பிரச்சனை செய்து எதிரி விக்கி கையால் அவர்களை அடித்தார், நான் வந்தவுடன் என்னை பார்த்து கேஸ்கொடுப்பியா என்று கேட்டு கீழே கருங்கல்லை எடுத்து என்மீது வீசினார். நான் விலகி கொள்ளவே அந்தக்கல் எனது வீட்டின் ஜன்னல் கண்ணாடி மீதுபட்டு கண்ணாடி உடைந்தது. பின்னர் நான் வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன். எங்களுக்கு வெளிக்காயம் எதுவும் ஏற்படவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது

தான். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எதிரிகள் தாஸ், விக்கி எனது உறவினர்கள் என்றால் சரிதான். என்னுடன் உடன் பிறந்தவர்கள் எத்தனைபேர் என்றால் இரண்டு தம்பிகள் ஸ்ரீதர் மற்றும் ராஜா. ராஜா பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட்டார் என்றால் சரிதான், தற்போது தலைவராக உள்ளார். பஞ்சாயத்து தேர்தலுக்கு பணம் தேவைப்பட்டதால் நாங்கள் மூன்றுபேரும் நிலத்தை வைத்து தாஸ் என்பவரின் மனைவியின் பெயருக்கு அடமானம் வைத்தோம் என்றால் சரியல்ல, தம்பிகள் தேர்தலுக்கு முன்பாகவே அடமானம் வைத்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பதிவு செய்யாத அடமான கடன்பத்திரத்தின் நகலில் கடந்த 2016 ம் ஆண்டு தாஸ் என்பவரின் மனைவியின் பெயருக்கு ரூ.8,00,000/- க்கு நான் அடமானம் செய்து எழுதி கொடுத்தது என்றால் சரிதான். எனது தம்பிகள் அவர்களுக்கு சொந்தமான சொத்தையும் தாஸ் என்பவரின் மனைவியின் பெயருக்கு அடமானம் செய்து எழுதிகொடுத்தார்கள் என்றால் சரிதான். எனது தம்பிகள் எழுதிகொடுத்த கடன் பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2. எனது கடன் பத்திரம் பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான். மேற்படி கடன்பத்திரத்திலுள்ள கையொப்பம் எங்கு வைத்து செய்தேன் என்றால் பதிவாளரின் அலுவலகத்தின் வெளியில் செய்தேன். பதிவாளரின் அலுவலகத்தின் வெளியில் கையொப்பம் செய்த பிறகு ரூ.8,00,000/- பெற்றுக்கொண்டவுடன் நான் பதிவு செய்ய மறுத்து வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி கடனை பைசல் செய்யவேண்டி சாட்சி சசிரேகா என்பவர் 1வது எதிரியின் தம்பி பாபுவிற்கு காசோலை கொடுத்து இந்நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்றால் சரிதான், தற்போது சமரசமாக சென்றுவிட்டார்கள். அதன் எண் எஸ்டிசி 124/2019

என்றால் தெரியாது. புகாரிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் வீட்டிலிருந்தபோது தான் 2வது எதிரி விக்கி வீட்டில் அத்துமீறி நுழைந்து சம்பவம் நடந்தாக புகரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் காயம் ஏற்படாததால் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரிதான்.

3. ரெட்டியார் தெருவில் தற்போது எத்தனை வீடுகள் உள்ளது என்றால் சுமார் 7, 8 வீடுகள் உள்ளது. அந்த வீடுகளிலுள்ள நபர்களை விசாரித்தால் சம்பவம் குறித்து தெரியும் என்றால் சரிதான். புகாரில் அடையாளம் தெரியாத 4 நபர்கள் வந்து பிரச்சனை செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகார் கொடுத்த பிறகு போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் விசாரித்தார்கள். எத்தனை நாட்கள் கழித்து விசாரித்தார்கள் என்றால் 3 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். அடையாளம் தெரியாத 4 நபர்களை பார்த்தால் அடையாளம் காட்டுவேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 2வது எதிரி எனது வீட்டினுள் வந்து என்னையும் எனது அம்மா, தம்பியின் மனைவி ஆகிய மூவரையும் தாக்கினார்கள் என்று புகாரிலும், போலிசர் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் தற்போது நீதிமன்றத்தில் நிலத்திலிருந்து வரும்போது சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை குறிப்பிட்டு புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

4. எதிரியிடம் நானும் எனது தம்பிகளும் சேர்ந்து சொத்தை அடமானம் வைத்தபிறகு சென்னையை சேர்ந்த நரசிம்மன் என்பவரிடம் நிலத்தை விற்க ஒப்பந்தம் செய்தேன் என்றால் சரிதான், எதிரி தாஸை கேட்டு செய்தேன். சென்னையை சேர்ந்த நரசிம்மன் என்பவரிடம் நிலத்தை கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது தம்பியின் மனைவியின் பெயரிலுள்ள காசோலை வழக்கு சமரசம் ஆகாமல் நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது. சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சம்பவம் நடக்கவில்லை, எதிரி விக்கி

யாரையும் அழைத்துவரவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு சேரவேண்டிய தொகையை கொடுத்துவிட்டு கிரையும் செய்யுமாறு எதிரிகள் கூறியதால் எதிரிகள் மீது பொய்யான வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்னவாறு எதிரிகள் என்னை தாக்கியிருந்தால் மருத்துவமனைக்கு சென்றிருப்பேன், அவ்வாறு நடக்காததால் தான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடக்காததால் தான் எனது உறவினர்கள் இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி பணியில் இருந்தார், அவருக்கு இந்த வழக்கிற்கும் சம்மந்ம் இல்லை என்றால் சரியல்ல, அவரின் தூண்டுதலின்பெயரில் மற்ற எதிரிகள் வந்தார்கள். 3, 4 எதிரிகள் சம்பவயிடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல.

5. போலிசார் எதிரிகளை அடையாளம் காட்ட அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால் சரிதான். கல்பட்டு எனது வீட்டின் ஜன்னல் கண்ணாடி உடைந்ததை புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு உடையாததால் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்று தேதிகுறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.